KALAIKESARI

# கலைக்கேசரி


CULTURE • HERITAGE • TRADITION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 1 ISSUE : 6 Registered i... under No. QD / 116 / News / 2010



இணைப்பு

செம்மொழி மாநாட்டுச் சிறப்புமலர்




மலை உச்சியில் வாழும் தெய்வங்கள்

இலங்கையில் பௌத்த சங்கம்

| | | |
|---|---|---|
| INDIA..............INR 100.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE...EUR 7.00 |

ISSN 2012-6824



# புராதன இலங்கையில் பௌத்த பிக்குகளும் பௌத்த சங்கமும்

வட இந்தியாவில் கி.மு 3ஆம் நூற்றாண்டளவில் பெரும் பேரரசை அமைத்த அசோகன் கலிங்கப்போரில் தனக்கேற்பட்ட துயர அனுபவங்களின் பின்னர் போரின் மூலம் நாடுகளை இணைத்துக் கொள்ளும் திக்விஜயத்தைக் கைவிட்டு அறவழியில் செல்லும் தர்மவிஜயத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்தான். போரில் ஏற்பட்ட துயரங்களைத் தணிக்கும் அறவழியை நிலைநாட்ட பௌத்த சமயத்தில் காணப்பட்ட தர்மம் பற்றிய சிந்தனைகள் தகுந்தனவெனக் கண்டான்.

அவை சாதாரண பொதுமக்களும் பின்பற்றுவதற்கு தகுந்த சமூகதர்மமாக விளங்கியமையால் அவற்றைத் தான் பின்பற்றுவது மட்டுமன்றித் தனது நாட்டிலும் பரப்புவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டமையைச் சான்றுகள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. தனது நாட்டிலுள்ளவர்கள் மட்டுமன்றி அயல்நாட்டவர்களும் அக்கொள்கையைப் பின்பற்றி, அமைதியையும் நல்வாழ்வையும் பெறவேண்டும் என்ற ஆவலினால் சமய தூதுவர்களை அந்நாடுகளுக்கு அனுப்பினான்.

தனது குடும்ப உறுப்பினர்களைக் கூட இப்பணியில் ஈடுபடுத்தியமையானது அசோகப்பேரரசன் புத்தரது தர்மக்கொள்கைகளைப் பரப்புவதில் கொண்டிருந்த ஈடுபாட்டினைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. இப்பின்னணியில் இலங்கையில் தேவநம்பியதீசனின் ஆட்சியில் அசோகனின் மகனாகிய மகிந்தரின் தலைமையில் பௌத்தமதம் அறிமுகம் செய்யப்பட்டமையைக் காணலாம். கி.மு.3 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் அறிமுகமாகிய பௌத்தம் அன்று தொடக்கம் ஆட்சியாளர்களின் அனுசரனையைப் பெற்று இன்றுவரை முக்கியமான இடத்திலுள்ள மையை அவதானிக்கலாம். துறவினைப் பின்பற்றிப் புத்தரின் கொள்கைகளை ஏற்று அவற்றைப் போதனை செய்யும் பணிகளை மேற்கொள்வோர் பிக்குகள் எனப்பட்டனர். இந்து மதத்தில் காணப்பட்ட சடங்குகள், கிரியைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றுக்கு எதிராகத் தோற்றம் பெற்றதே பௌத்த சமயமாகும். இதனால் இந்து சமயத்தின் சில அம்சங்கள் பௌத்தத்தில் காணப்படுவது தவிர்க்கமுடியாததே.

இந்துக்களின் நான்கு ஆச்சிரம தர்மங்களில் பிரமச்சரியம், சந்நியாசம் என்பன வாழ்வின் இடை, கடைப் பகுதியில் கடைப்பிடிக்க வேண்டியவையாகும். இவ்விரு நெறிகளே பௌத்தமதத்தில் பிக்குகளின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்தியிருக்கக் கூடுமெனக் கருதப்படுகின்றது. 'உபசம்பதா' என்ற சடங்கு மற்றவர்களிடமிருந்து பிக்குகளை வேறுபடுத்தவும் அவர்களுக்குரிய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும் உதவியது. அநுராதபுர கால பௌத்தத்தின் வளர்ச்சியில் பௌத்தசங்கத்தின் தோற்றமும், எழுச்சியும் குறிப்பிடத்தக்கதாகும். இச்சங்கத்தில் பிக்குகள் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. சாதிப் பாகுபாடுகளோ, பிறபாகுபாடுகளோ பௌத்தபிக்குகளாவதற்குத் தடையாக இருக்கவில்லை. புத்தம், தர்மம், சங்கம் என்பனவே அவர்களின் தாரக மந்திரமாகும்.

பொதுவாக பண்டைய காலத்தில் சமயத் தலைவர்கள் அரசர்களுடைய அவையிலே பல்வேறு நிலைகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அநுராதபுர இராசதானியில் பிராமணர்கள் ஆசிரியர்களாகவும், ஆலோசகர்களாகவும், சமயக்கடமைகளை ஆற்றுவோராகவும் பணிபுரிந்தமைக்கு பாளி இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. பௌத்தசமயம் எழுச்சியடைந்ததையடுத்து பௌத்தபிக்குகள் அவ்விடத்தைப் பெற்றுக்கொண்டனர். இவர்கள் புத்தருடைய

கருத்துக்களைப் போதித்தல், கற்பித்தல் போன்ற பணிகளில் ஆரம்பகாலத்தில் ஈடுபட்டனர். பௌத்தமதத்தை அநுராதபுரத்திலும், பிற இடங்களிலும் பரப்புவதிலும், அதனை நிலைநிறுத்துவதிலும் இவர்கள் பெரும்பங்களிப்புச் செய்தனர்.

அவ்வப்போது இவர்கள் கல்வி மற்றும் புனித யாத்திரைகளின் பொருட்டு அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று வந்தமை பௌத்தத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்ததென்பதை மறுப்பதற்கில்லை. அங்குள்ள நாலந்தா, தட்சசீலம் போன்ற பௌத்த கல்விக்கூடங்களுக்கு இலங்கைப்பிக்குகள் செல்வதும், அங்கிருந்து பிக்குகள், யாத்திரிகர் உள்ளிட்ட பலர் இலங்கையிலிருந்த மகாவிகாரை, அபயகிரி விகாரை போன்றவற்றுக்கு வருகை தருவதும் வழக்கமாக இருந்தது. பிற்காலத்தில் சீனா, ஜப்பான், திபெத், கம்போடியா போன்ற நாடுகளுடனும் இலங்கைப் பிக்குகள் சமயரீதியிலான தொடர்புகளை வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலங்களில் நகருக்கு ஒதுக்குப் புறத்தில் காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் வாழ்ந்த பிக்குகள் காலப்போக்கில் அரசவையிலும் அரச குடும்பத்திலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கினர்.

இவர்கள் இருசோடி ஆடைகள், பிச்சா பாத்திரம், ஊசி, நூல், சவரக்கத்தி ஆகிய பொருட்களை மட்டுமே வைத்திருக்க வேண்டும் என்பது பௌத்த மதத்தின் தொடக்ககால மரபாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் சாதாரண மக்கள் தொட்டு அரசகுடும்பம் வரைத் தானமாக வழங்கிய நிலம், குளம், கால்வாய், குகை, கற்படுக்கை என்பவற்றால் பௌத்த சங்கம் உருவாகி, அது அரசிற்குச் சமமான நிலையில் சொத்துடைய நிறுவனமாக வளர்ந்தது. இதனால் பௌத்த துறவிகளின் பணி போதனைக்கப்பால் கல்வி, சமூக நலன், மருத்துவம் என விரிவடைந்தது. இத்தகைய கொடைகளால் பொருளாதார ரீதியாகவும் எழுச்சியடைந்த பிக்குகள் செல்வாக்கிலும் அரசுக்கு நிகராக எழுச்சி பெற்றனர்.

அரசர்களும் அரசபதவியும் மாறும் தன்மையுடையதாக இருந்தபொழுது பௌத்தசங்கம் என்றும் நிலைபெற்றிருக்கும் நிறுவனமாக விளங்கியது. இதனால் பொருளாதார ரீதியாகக்கூட பொதுமக்கள் சங்கத்துடன் தொடர்புகளைப் பேணக் கூடியதாக இருந்தமை சங்கத்தின் அதிகார வளர்ச்சிக்கு ஏதுவாகியது.

நாளடைவில் அரசியல் பிணக்குகளைத் தீர்த்து வைக்குமளவுக்கு செல்வாக்குப் பெற்றமையைச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. தென்னிந்தியத் தமிழ்ப் படையெடுப்பாளர்களிடமிருந்து வட்டகாமணியைப் பாதுகாத்தவர் குபிக்கல மகாதிஸ தேரர் என்ற பிக்குவேயாவர்.



இதற்கு நன்றிக் கடனாக வட்டகாமணி 'அபயகிரி' விகாரையைக் கட்டிக் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. இவ்விகாரை பிற்காலத்தில் மகாஜான பௌத்தத்தின் மையமாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்கள் நாட்டின் ஆட்சியாளரின் கொள்கைகளையே மாற்றும்படி செய்தமைக்கு மகாசேனனின் ஆட்சி சிறந்த சான்றாக அமையும். தமிழ்நாட்டிலிருந்து வந்த சங்கமித்திரர் என்ற பிக்கு மகாசேனனின் ஆசிரியராகி, மகாஜான பௌத்தக் கொள்கைகளை ஏற்கச்செய்து, தேரவாதபௌத்த மையங்களையும் இந்துக்கோவில்களையும் அழிக்கச் செய்தமையை மகாவம்சம் அறியத்தரும். இக்காலகட்டத்தில் தேரவாத - மகாஜான பௌத்த பிக்குகளிடையே பெரும்வாதங்கள் நடைபெற்றதை அவதானிக்கலாம். மகாபாரக்கிரமபாகுவுக்கும் கஜபாகுவுக்கும் இடையே உடன்பாடு ஏற்படுவதற்கும் பௌத்த சங்கமே காரணமாக இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. இந்நிகழ்வுகள் பௌத்தசங்கமும், பௌத்தபிக்குகளும் ஆரம்ப காலத்தில் இலங்கையில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவனவாகவுள்ளன.

பௌத்தர்களின் வழிபாட்டு மையமாக தூபிகளும், விகாரைகளும் விளங்குகின்றன. சிறப்பாகத் தூபி வழிபாட்டு இடமாகவும், விகாரை பௌத்த துறவிகள் தங்குகின்ற இடமாகவும், கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் மையமாகவும் காணப்படுகின்றது. பாளி இலக்கியங்கள் தேவநம்பியதீச மன்னன், மகிந்ததேரரும் அவரது குழுவினரும் தங்குவதற்காக மகாவிகாரையைக் கட்டிக்கொடுத்தான் எனக் கூறுகின்றன. இவ்விகாரையே இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது விகாரையாகும். இதனையடுத்து இலங்கையின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்பவர்கள் விகாரைகள், தாதுகோபுரங்கள் முதலியவற்றை நிறுவுவதையும், பிக்குகளை ஆதரிப்பதையும் பிரதான கடமையாகக் கருதிச் செயற்பட்டனர்.

ஓர் ஆட்சியாளன் தனது பதவியை நிலைநாட்ட இப்பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மகிந்ததேரர் இலங்கைக்கு வந்த புதிதில் ஆண்களே பௌத்த துறவிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தேவநம்பியதீசனின் தம்பியின் மனைவியாகிய அனுலா 500 தோழிகளுடன் பிக்குணியாவதற்கு விரும்பினாள். அதனை அறிந்த மகிந்த தேரர் தனது சகோதரியாகிய தேரி சங்கமித்தையே பெண்களைப் பிக்குணிகளாக்குவதற்குப் பொருத்தமானவள் என்றும், பேரரசனுக்குத் தூதுக்குழுவை அனுப்புமாறும் ஆலோசனை கூறினார்.

இதன் பிரகாரம் புத்தர் ஞானம்பெற்ற போதி மரக்கிளையுடன் இலங்கையின் வடபகுதியிலிருந்த ஜம்புக்கோளப் பட்டினத்தினூடாக சங்கமித்தை அநுராதபுரத்தை வந்தடைந்ததாகவும், மகாமேகவனம் உள்ளிட்ட பல இடங்களில் அக்கிளை நாட்டப்பட்டதாகவும் மகாவம்சம் கூறுகின்றது.

இதனைத் தொடர்ந்து அனுலாவும் அவளுடன் 500 பெண்களும் பிக்குணிகளாக்கப்பட்டனர். இதன்மூலம் இலங்கையின் வரலாற்றில் முதன் முதலாகப் பெண்கள் பிக்குணிகளாக சங்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதைக் காணலாம். அதேவேளை அரசமரத்தை நாட்டி வழிபடும் மரபு பௌத்தத்தில் பிரதான இடத்தைப் பெற்றிருப்பதை இன்றுவரை காண்கின்றோம். ஏறக்குறைய 1300 ஆண்டுகால வரலாற்றுப் பெருமைமிக்க அநுராதபுர காலத்தில் அறிமுகமாகிய பௌத்தம் இலங்கையின் அரச சமயம் என்ற அந்தஸ்தைப் பெற்றதுமன்றி, பௌத்தத்தை, பௌத்தசங்கத்தை ஆதரிப்பவரே இலங்கையின் அரசபதவியை நிலைநிறுத்த முடியுமென்பதையும், பிற்காலத்தில் புனித தந்ததாதுவினை யார் வைத்திருக்கின்றாரோ அவரே நாட்டின் ஆட்சியாளராகலாம் என்பதையும் நிலைநிறுத்தியது. இத்தகைய பின்னணியே இன்றும் இலங்கையின் அரசியலில் பௌத்தசங்கமும், பௌத்ததுறவிகளும் முக்கியத்துவம் பெறுவதற்கு காரணமாக இருந்து வருகின்றது.

- சாந்தினி அருளானந்தம்
யாழ். பல்கலைக்கழகம்

